விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 104 வள்ளுவர் ஆண்டு 2057 பங்குனி 19 வியாழக்கிழமை (02.04.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### கணிதப் பிரிவில்

## கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் தேசிய ரீதியில் முதலிடம்



### ஆளுநர் நேரில் சென்று பாராட்டு

(கிளிநொச்சி)

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கணிதப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன்

15ஆம் பக்கம் பார்க்க

### காணி சுவீகரிப்புக்கு எதிராக

## இயக்கச்சியில் இன்று மாபெரும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி இயக்கச்சியில் இராணுவத்தினரின் தேவைக்காகப் பொதுமக்களின் காணி சுவீகரிக்கப்படவுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இயக்கச்சியில் இன்று மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்

15ஆம் பக்கம் பார்க்க


### சுட்டெரிக்கும் சூரியன்

# வடக்கில் வெப்பம் இன்று உச்சம் பெறும்

### வெயிலில் செல்வதைத் தவிர்க்குமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு மாகாணம் உட்பட நாட்டின் 21 மாவட்டங்களில் இன்று அதி வெப்பமான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



(04ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இந்து 67
## வேம்படி 41

### 3ஏ சித்தி பெற்று சாதனை

(யாழ்ப்பாணம்)

வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக்

15ஆம் பக்கம் பார்க்க

## 62.64 சதவீதமானோர் பல்கலைக்குத் தகுதி

### 111 பேரின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மொத்த பரீட்சார்த்திகளில் 62.64

15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தையிட்டி பகுதியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டம் ஒன்று நேற்று

15ஆம் பக்கம் பார்க்க

## எரிசக்தி மூலங்களை இலங்கைக்கு வழங்க ரஷ்யா இணக்கம்!



(கொழும்பு)

இலங்கையில் நெருக்கடிகள் ஏற்பட்டாலும் இல்லாவிட்டாலும் எரிபொருள், எரிவாயு மற்றும் நிலக்கரி உள்ளிட்ட எரிசக்தி மூலங்களை இலங்கைக்கு வழங்குவதற்கு ரஷ்யா தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்

04ஆம் பக்கம் பார்க்க

## அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

நாட்டிற்கு சில வகை அரிசி வகைகளை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

உள்நாட்டுச் சந்தையில் தற்போது நிலவி வரும் சம்பா மற்றும் கீரிச் சம்பா அரிசிக்கான தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக மாற்று அரிசி வகைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்

15ஆம் பக்கம் பார்க்க

## போதை மாத்திரைகளுடன்

### வவுனியாவில் ஐவர் கைது

(வவுனியா)

போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட

15ஆம் பக்கம் பார்க்க

## 777 மெழுகுதிரித் தாங்கிகளை சேகரித்து, காட்சிப்படுத்தி

### முறிகண்டியில் ஈழத்துப் பெண் கின்னஸ் சாதனை




04ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# சேவைநலன் பாராட்டு

## திரு. பொன்னையா உதயராசா
SLTS - I

Best Wishes!

**சேவைவிபரம்**

- மு/குமுளமுனை மகாவித்தியாலயம்(உதவி ஆசிரியர்) - 1990.03.15 - 1994.04.05
- மு/அம்பலவன் பொக்கனை மகாவித்தியாலயம்(உதவி ஆசிரியர்) - 1994.04.06 - 1997.01.01
- மு/கலைமகள் வித்தியாலயம்(பயிற்றப்பட்ட ஆசிரியர் - கணிதம்) - 1997.01.02 - 2000.12.31
- யா/சன்மார்க்கம் மகாவித்தியாலயம்(பயிற்றப்பட்ட ஆசிரியர் - கணிதம்) - 2001.01.01 - 2008.08.31
- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்(பயிற்றப்பட்ட ஆசிரியர் - கணிதம்) - 2008.09.01 - 2019.12.31
- யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி(பயிற்றப்பட்ட ஆசிரியர் - கணிதம்) - 2020.01.01 - 2026.04.02

(C-5318)

அரும்பணியாற்றிய ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்




## திரு.செல்வராசா மதனரூபன்
(BEd, Primary Trd SLPS -3)

எமது பாடசாலையின் பிரதி அதிபராகக் கடமையாற்றி 23.03.2026 தொடக்கம் யா/குடமியன் அ.த.க பாடசாலையின் அதிபராக பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/நாவற்குழி ம.வி

(C-5319)


# ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டின் இது வரையான காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 1.6 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதை இலங்கை மத்திய வங்கி உறுதிப்படுத்தியுள்ளது.

2026 பெப்ரவரி பிற்பகுதியில் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்ட போர்ச் சூழலால் உருவான வெளிநாட்டுத் துறை அழுத்தங்களே ரூபாயின் பெறுமதி இவ்வாறு வீழ்ச்சியடையக் காரணம் என மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

(ம-7)


# காணவில்லை



சாவல்கட்டு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த **இராசலிங்கம் தவநீதன்** வயது 46 என்பவரை 13.03.2026 முதல் காணவில்லை. கண்டவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.


(7177)

**077 755 3698**
**076 297 5627**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கலாநிதி
## பாலசிங்கம் செவ்வேள்
(Dip in Teach, BA, PGDE, MED, PhD)



எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு.பாலசிங்கம் செவ்வேள் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 02.02.2026 அன்று இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் கலாநிதி பட்டம் பெற்றமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்:
யா/நாவற்குழி ம.வி

(C-5319)


# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 08 - 05 - 1926 | | 30 - 03 - 2026 |



## நீலாம்பிகை ஐயாத்துரை

யாழ்.வசாவிளானைப் பிறப்பிடமாகவும், குப்பிழான் வீரமனையை வசிப்பிடமாகவும் கொண்ட நீலாம்பிகை ஐயாத்துரை அவர்கள் கடந்த திங்கட்கிழமை (30.03.2026) குப்பிழானில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - தெய்வயானை தம்பதியரின் மருமகளும் அமரர்களான கமலாம்பிகை, அமிர்தாம்பிகை, நகுலாம்பிகை, கதிர்காமத்தம்பி, நேசாம்பிகை, கமலநாதன் மற்றும் பாலாம்பிகை ஆகியோரின் சகோதரியும் சறோஜினிதேவி, பிறேமாவதி, சுலோசனாதேவி, இராசேஸ்வரி, திருமலர், கருணாநிதி, சிவகருணை ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவலிங்கம், காலஞ்சென்ற நடராசா, தெய்வேந்திரம், காலஞ்சென்ற சண்முகராசா, செல்வம், தயாளினி, கேமதி ஆகியோரின் மாமியாரும் சிவரூபன், சிவரஞ்சினி, லம்போதரன், ஞானகிருஷ்ணன், பிரியதர்சினி, சேரமான், காலஞ்சென்ற சயந்தன் மற்றும் நிரோசன், நிலக்சன், விதுசன், தவசீலன், கயசீலன், சத்தியசீலன், ஆரணி, ஆருடன், அபிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.04.2026) வியாழக் கிழமை காலை 08.30 மணியளவில் குப்பிழானில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மு.ப 11 மணியளவில் குப்பிழான் காடகடம்பை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வீரமனை,
குப்பிழான்.

தகவல் : குடும்பத்தினர்
தெய்வேந்திரம் சுலோசனாதேவி - 077 999 8668

(C-5322)


# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடம் காரைநகர் வீதியில் 32 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- யாழ். மானிப்பாய் வீதி ஆறுகால்மடச் சந்தி 1 ஆம் ஒழுங்கை
- யாழ். மாநகரசபை எல்லைக்குள்
- ஒரு பரப்பின் விலை முன் பகுதி 12 இலட்சம்
  பின் பகுதி 10 இலட்சம்
- 1 ½ பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ். பஸ் நிலையம் 1 ½ Km தூரம்
- ஒட்டுமடச் சந்தி 300m
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- காரைநகர் வீதியிலிருந்து இரண்டாம் காணி

(2203)

தொடர்புகளுக்கு :
**076 990 3039, 077 468 3354**


# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## திருமதி கோணேஸ்வரன் சிவகௌரி



ஆறு ஆண்டுகளானாலும்
ஆறாத எம் துயரம் மாறாத நினைவுடனே
வாழ்கின்றோம் உம் நினைவு அலைகளினால்
நீடூழி வாழ்வீர் என நினைவுகளில்
உற்றுநாமும் நியமதினில் வாழ்ந்திடவே
நீண்ட தூரம் சென்றதேனோ அம்மா!
வாழ்வின் உயர்வுக்காய், உதிரத்தை
ஈகையாக்கி எமை நிறைவுற வழிசமைத்தவரே
காலமதன் கட்டளையில் கைகோர்த்து
உதிரத்தை உணவாக்கி உயிர்காத்த
எம் பொருளே...

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20.10.1976 | 02.04.2020 |

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

நீங்கா நினைவுகளுடன் ...
குடும்பத்தினர்

(2202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஏப்ரல், மே மாதங்களுக்கு தட்டுப்பாடின்றி எரிபொருள்

## உறுதிப்படுத்தியது பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

ரஷ்யாவிடமிருந்து இலங்கைக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.



ரஷ்ய அதிகாரிகளுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான எரி பொருள் விநியோகங்கள் பெரும்பாலும் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூட்டுத்தாபனத்தின் மேலாளர் பணிப்பாளர் மயூர நெத்திகுமார தெரிவித்துள்ளார்.

எரிபொருள் கப்பல்கள் வருகை தருவதில் ஏற்படும் தாமதங்கள் எரிபொருள் விநியோகப் பற்றாக்குறையால் அல்ல, மாறாக நாட்டின் இரண்டு பிரதான எரிபொருள் இறக்குமதி முனையங்களில் நிலவும் நெரிசல் காரணமாகவே ஏற்படுவதாக அவர் விளக்கமளித்துள்ளார்.

இலங்கையில் தற்போது எரிபொருளை இறக்குவதற்கு இரண்டு பிரதான இடங்கள் மட்டுமே உள்ளன.

ரஷ்ய விநியோகஸ்தர்களிடமிருந்து வரும் கப்பல்களைக் கையாளுவதற்குத் தேவையான தளபாட மற்றும் தொழில்நுட்ப ஏற்பாடுகள் தற்போது இறுதி செய்யப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

எரிபொருள் கப்பல்களின் வருகையைத் திட்டமிடுதல் மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

இருப்பினும் ரஷ்யாவிடமிருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் எவ்வித சிக்கலும் இல்லை என்றும் அது ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட ஒரு விடயம் என்றும் கலாநிதி மயூர நெத்திகுமார வலியுறுத்தியுள்ளார். (நி)

# ஏப்ரல் 6 முதல் வழமைக்கு திரும்பும் சேவைகள்

## ஆட்பதிவுத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்களின் சேவைகள் எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் வழமை போல், நடைபெறுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

கணினி அமைப்பில் ஏற்பட்ட கோளாறுகள் சீர் செய்யப்பட்டவுடன் அனைத்து சேவைகளும் தொடர்ந்து செயற்படும் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கணினி அமைப்பைச் சீர் செய்யும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் திணைக்களத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தேசிய அடையாள அட்டைத் தகவல்களைச் சரிபார்த்தல் மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் உள்ளிட்ட ஏனைய அனைத்து சேவைகளும் மட்டுப்படுத்தலுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதால், இதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மாற்று முறைகளைக் கையாள வேண்டும் எனவும் திணைக்களம் கேட்டுள்ளது. (நி)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு 10 ஆயிரம் பொலிஸார் கடமையில்

(கொழும்பு)

எதிர்வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டு பண்டிகைக் காலங்களில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பொலிஸார் ஒரு விசேட பாதுகாப்புத் திட்டத்தை நடை முறைப்படுத்தியுள்ளனர்.

நாடு தழுவிய 608 பொலிஸ் நிலையங்களிலும் இந்தப் பாதுகாப்புத் திட்டம் செயற்பாட்டில் இருக்கும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சருமான எஃப். யூ. வுட்லர் தெரிவித்தார்.

மேலும், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் போக்குவரத்து மற்றும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி)

# முச்சக்கரவண்டியில் சாகசம்

## காணொளியால் சிக்கிய இளைஞர்கள்

(கம்பஹா)

கம்பஹா, வெலிவேரிய பகுதியில் முச்சக்கர வண்டியொன்றில் ஆபத்தான முறையில் சாகசத்தில் ஈடுபட்ட இரு இளைஞர்கள், சமூக வலைத்தளங்களில் வைரலான காணொளி ஆதாரத்தின் அடிப்படையில் பொலிஸாரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நெடுங்கமுவ முதல் மீகஹவத்த வரையிலான பிரதான வீதியில், முச்சக்கர வண்டியை ஆபத்தான முறையில் செலுத்தி இளைஞர்கள் சாகசத்தில் ஈடுபடும் காணொளி இணையத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

போக்குவரத்து மேலாண்மை மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீரவின் உத்தரவின் பேரில், பொலிஸ் தொழில்நுட்பக் குழுவினர் இக் காணொளியை ஆய்வு செய்து சம்பவம் நடந்த இடத்தை உறுதிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், வெலிவேரிய பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய முச்சக்கரவண்டிச் சாரதி மற்றும் அதன் 23 வயதுடைய உரிமையாளர் ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில், அவர்கள் போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களுக்கு எதிராக "ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்துதல்" மற்றும் "பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்க முயற்சித்தல்" ஆகிய பாரதூரமான குற்றச்சாட்டுகளின் கீழ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

பொலிஸார் நேரில் இல்லாத இடங்களிலும், தொழில்நுட்பம் மற்றும் சமூக வலைத்தள ஆதாரங்கள் மூலம் சட்டத்தை நிலைநாட்டத் தயங்கப் போவதில்லை என அவர் இதன் போது கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி)

# அனுமதிப்பத்திரமின்றி டீசல் வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

அனுமதிப்பத்திரமின்றி 150 லீற்றர் டீசலை வைத்திருந்த குற்றச்சாட்டில், நீர்கொழும்பு - கொச்சிக்கடை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக கொச்சிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

கொச்சிக்கடை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக, நீர்கொழும்பு பிரிவின் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கொச்சிக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலுவகொட்டுவ பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# ஏப்ரல் 6 முதல் 22 வரை

## மீள்திருத்தத்திற்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியாகியிருந்த நிலையில், பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதிபெற்றவர்கள் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி, வெளியாகியுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில் 1 இலட்சத்து 76 ஆயிரத்து 527 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

மேலும், 11 மாணவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், வெளியாகியுள்ள பெறுபேறுகள் தொடர்பில் மீள்திருத்தம் செய்ய விரும்புபவர்கள் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மீள் திருத்த விண்ணப்பங்கள் இணைய வழியின் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். (நி)

# வைத்திய அதிகாரிகளின் பணிப்பகிஷ்கரிப்பு நிறைவு

(கொழும்பு)

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட 24 மணி அடையாள பணிப்பகிஷ்கரிப்பு நேற்றுக் காலை 8 மணியுடன் நிறைவடைந்தது.

இதனைத் தொடர்ந்து, மேலதிக நடவடிக்கைகள் குறித்து இன்று நடைபெறும் அவசர நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் பின்னர் தீர்மானிக்கப்படும் என சங்கத்தின் துணைச் செயலாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, சுகாதார அமைச்சர் அரசியல் காரணங்களுக்காக, பயிற்சிக்காக நியமிக்கப்பட்ட வைத்தியர்களின் இடமாற்றப் பட்டியலை தவறாக பயன்படுத்தி வருகிறார்.

கஷ்டப் பிரதேசங்களுக்கான இடமாற்ற பட்டியல்கள் விகாரப்படுத்தப்பட்டதால், அடுத்த இரண்டு மாதங்களில் நாட்டில் சுமார் 150 கஷ்டப் பிரதேச வைத்தியசாலைகள் மூடப்பட வாய்ப்பு உள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் எவ்விதத் தயார்நிலையும் இல்லை.

சுகாதார அமைச்சர் ஊடகங்களுக்கு முன்னால் தவறான தகவல்கள், தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்களை பெருமையுடன் வெளிப்படுத்துவது அவருடைய அறியாமையைக் காட்டுகிறது எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத்தை பந்தாடிய பஞ்சாப் கிங்ஸ்

## 3விக்கெட்டுகள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி!

**குஜராத் டைட்டன்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதிய ஐ.பி.எல் தொடரின் 4 ஆவது போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றுள்ளது.**




ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 4ஆவது போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் கிங்ஸ் அணியின் கப்டன் ஷ்ரேயாஸ் அய்யர் பந்துவீச்சு தேர்வு செய்தார்.

இதைத் தொடர்ந்து முதலில் துடுப்பாட்டம் செய்த குஜராத் டைட்டன்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 162 ஓட்டங்களை சேர்த்தது. குஜராத் சார்பில் கப்டன் சுப்மன் கில் அதிகபட்சமாக 39 ஓட்டங்கள், ஜாஸ் பட்லர் 38 ஓட்டங்கள், கிளென் பிலிப்ஸ் 25 ஓட்டங்கள், வாஷிங்டன் சுந்தர் மற்றும் சாய் சுதர்சன் முறையே 18 மற்றும் 13 ஓட்டங்கள் சேர்த்தனர்.

பஞ்சாப் கிங்ஸ் சார்பில் விஜய் குமார் வைஷாக் 3 விக்கெட்டுகளையும், யுஸ்வேந்திர சாஹல் 2 விக்கெட்டுகளையும், மார்கோ யான்சென 1 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து 163 ஓட்டங்களைத் துரத்திய பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. அந்த அணியின் ப்ரியான்ஷ் ஆர்யா 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.

இவருடன் களமிறங்கிய பிரப்சிம்ரன் சிங் 24 பந்துகளில் 37 ஓட்டங்கள் விளாசினார். அடுத்து களமிறங்கிய கூப்பர் கானோலி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும், அடுத்தடுத்து களமிறங்கிய கப்டன் ஷ்ரேயாஸ் அய்யர் 18 ஓட்டங்களிலும், நேஹல் வதெரா 3 ஓட்டங்களிலும், மார்கஸ் ஸ்டொய்னிஸ் ஓட்டம் ஏதும் எடுக்காமலும் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர்.

ஒருபக்கம் விக்கெட்டுகள் சரிந்த போதிலும், கூப்பர் காணொலி சிறப்பாக ஆடி 44 பந்துகளில் 72 ஓட்டங்களைக் குவித்தார். இறுதியில் பஞ்சாப் கிங்ஸ் அணி 19.1 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 165 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (3)

## 777 மெழுகுதிரி...

777 மெழுகுதிரி தாங்கிகளை சேகரித்துக் காட்சிப்படுத்தி ஈழத்துப் பெண் கின்னஸ் உலக சாதனை படைத்தார். குறித்த காட்சிப்படுத்தும் நிகழ்வு நேற்று இரவு 7 மணியளவில் முறிகண்டியில் நடைபெற்றது.

கனடாவில் வாழும் ஈழத்துப் பெண்ணான ஆயுள்வேத வைத்தியர் குமுதினி கோபாலகிருஸ்ணன் குறித்த கின்னஸ் சாதனைக்காக குறித்த நிகழ்வை நடத்தினார்.

இதற்கு முன்னர் அமெரிக்கர் ஒருவர் 527 மெழுகுதிரி தாங்கிகளை சேகரித்து காட்சிப்படுத்தி கின்னஸ் சாதனை படைந்திருந்திருந்தார்.

குறித்த சாதனையைத் தாண்டி 777 மெழுகுதிரி தாங்கிகளை சேகரித்து குறித்த சாதனையை நேற்றுப் பதிவு செய்தார்.

கனடாவில் வசித்து வரும் குமுதினி கோபாலகிருஸ்ணன் ஆயுள் வேத வைத்தியராக சேவை செய்து வருகின்றார்.

தனது வாழ்நாளில் கின்னஸ் சாதனை ஒன்றை நிகழ்த்த வேண்டும் என்ற கனவுடன் கடந்த 30 வருடமாக மெழுகுதிரி தாங்கிகளை சேகரித்து வந்தார்.

குறித்த கின்னஸ் சாதனைக்காக விண்ணப்பித்திருந்த அவர், தனது சாதனையை ஈழத்தில் நிகழ்த்தும் நோக்குடன் நேற்று தனது சாதனை பதிவினை மேற்கொண்டார்.

முறிகண்டி பகுதியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இல்லத்தில் குறித்த காட்சிப்படுத்தல் இடம் பெற்றது. (ம-7,100)

## வடக்கில் வெப்...

நாடு முழுவதும் வெப்பமான வானிலை நிலவுவதால் பொதுமக்கள் வெயிலில்செல்வதை இயலுமானவரை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இன்று (ஏப்ரல் 2) முதல் அமலுக்கு வரும் இந்த அறிவுறுத்தலின்படி 21 மாவட்டங்களில் மனித உடலில் உணரப்படும் வெப்பக் குறியீடு அதிகரிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நீண்ட நேரம் வெளியில் இருக்கும்போது மக்களுக்கு கடும் சோர்வு ஏற்படலாம் என்றும் தொடர்ச்சியான உடல் உழைப்பு வெப்பத் தசைப்பிடிப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தேவையற்ற நேரங்களில் வெயிலில் அலைவதைத் தவிர்க்கவும் அதிக அளவு தண்ணீர் குடிக்கவும் வெளியே செல்லும்போது தலையை மூடிக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-7)

## எரிசக்தி மூலங்க...

சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், அமைச்சர் பிமல் ரத்நாயக்க ரஷ்யாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, அந்நாட்டின் எரிசக்தி பிரதி அமைச்சர் ரமன் மர்ஷாவின் இதனை உறுதிப்படுத்தியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் முன்னெடுக்கப்படும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான ஆதரவைத் தொடர்ச்சியாக வழங்கவும் பிரதி அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

மத்திய கிழக்கின் போர்ச் சூழலால் இலங்கையின் எரிசக்தி விநியோகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தனது நாடு அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்று தெரிவித்த ரஷ்ய எரிசக்தி பிரதி அமைச்சர், இலங்கைக்குத் தற்போது தேவையான எரிபொருளை வழங்குவதற்கும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க உடன்பட்டுள்ளார்.

அதற்கமைய ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்ள முடியும்என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேவையான எரிபொருள் கையிருப்புகளை விரைவாக விடுவிக்கும் செயல்முறையை முறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய பிரதி அமைச்சர், இதற்காக ரஷ்ய நிறுவனங்களுக்கும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் ஒப்பந்தங்களை மேற்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வசதிகளைத் செய்து தருவதாகவும் கூறினார். (ம-7)

# ஈரானுக்கான போட்டிகள் அமெரிக்காவிலேயே நடைபெறும்

### சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு திட்டவட்டம்

2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணக் கால்பந்து போட்டிகளில், ஈரானுக்கான போட்டிகளை அமெரிக்காவிலிருந்து மெக்சிகோவிற்கு மாற்றுமாறு ஈரான் விடுத்த கோரிக்கைக்கு சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு பதிலளித்துள்ளது.

தற்போதைய போர்ச்சூழல் மற்றும் அரசியல் பதற்றங்களைக் கருத்திற் கொண்டு போட்டிகள் நடைபெறும் இடத்தை மாற்ற வேண்டும் என ஈரான் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும், போட்டி அட்டவணையின்படி தீர்மானிக்கப்பட்ட மைதானங்களிலேயே ஆட்டங்கள் நடைபெறும் என்றும், இதில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்றும் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் தலைவர் ஜியானி இன்ஃபான்டினோ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

எனவே, திட்டமிட்டபடி அமெரிக்காவிலேயே போட்டிகள் நடத்தப்படும் என்பதில் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு உறுதியாக உள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)

## ஐ.பி.எல் இன்றைய ஆட்டங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நேட்டோவிலிருந்து வெளியேறுகிறதா அமெரிக்கா ட்ரம்ப் விடுத்துள்ள அதிரடி எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**ஈரான் மீதான இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கத் தவறிய நேட்டோ அமைப்பிலிருந்து அமெரிக்காவை வெளியேற்றுவது குறித்துத் தாம் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

மத்திய கிழக்கு பிராந்தியத்தில், குறிப்பாக ஈரானுடனான தற்போதைய போர்ச் சூழலில், நேட்டோ உறுப்பு நாடுகள் அமெரிக்காவிற்குப் போதிய இராணுவ ஆதரவை வழங்கவில்லை என்ற அதிருப்தி ஜனாதிபதி ட்ரம்ப் தரப்பில் எழுந்துள்ளது.

ஹார்முஸ் நீரிணைப் பகுதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஐரோப்பிய நட்பு நாடுகள் பின்வாங்குவது "ஏமாற்றமளிப்பதாக" அவர் குறிப்பிட்டுள்ளார்.

"நேட்டோ அமைப்பிற்காக அமெரிக்கா ஒவ்வொரு ஆண்டும் பல நூறு பில்லியன் டொலர்களைச் செலவிடுகிறது. ஆனால், எங்களுக்குத் தேவைப்படும்போது அவர்கள் உதவத் தயாராக இல்லை. இது ஒரு ஒருதலைப்பட்சமான உறவாகவே உள்ளது. இத்தகைய சூழலில், அந்த அமைப்பில் நீடிப்பது குறித்து நாம் ஏன் சிந்திக்கக்கூடாது?" என ட்ரம்ப் ஊடகவியலாளர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. நேட்டோ அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேறினால், அது இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய உலகளாவிய பாதுகாப்பு கட்டமைப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

ஈரானுடனான போர் இன்னும் சில வாரங்களில் முடிவுக்கு வரும் என எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ள ட்ரம்ப், அதன் பின்னர் நேட்டோவுடனான உறவை மீளாய்வு செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், நேட்டோவிலிருந்து விலகுவதற்கு பாராளுமன்றத்தின் ஒப்புதல் அவசியமா என்பது குறித்த விவாதங்களும் தற்போது அமெரிக்காவில் சூடுபிடித்துள்ளன. (நி)


மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி. மொறின் தேவதாஸ்
SLTS-I, B.Sc, Dip.in Education

சேவை விபரம்
- கண்டி அஷார் மத்திய கல்லூரி – 1995.01.13 – 2000.04.28
- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி – 2000.05.04 – 2017.11.15
- யா/நெல்லியடி மத்திய கல்லூரி – 2017.11.16 – 2018.01.17
- யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை – 2018.01.18 – 2026.04.01

சிறகடிக்கும் சிட்டுக்குருவிகள்
சிறப்புடன் அருகமரும் திறனறிவீர்!
பேறெல்லாம் பெரும் பேறாய்
மாறிய உலக அதிசயம்
மொறினின் சாட்சியமே !!
வீறாய் எழும் வேம்படியில்
உறவாயிரும் எந்நாளும்!!!
அறுபதில் வாழ்த்துகிறோம்
வாழி! வாழி!! வாழியவே!!!

Congratulations

எமது சக ஆசிரியர் திருமதி.மொறின் தேவதாஸ்
அவர்கள் 2026.04.01 நேற்றுடன் 31 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்
இவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய வாழ்த்தி நிற்கும்

(C-5317)

ஆசிரிய நலன்புரிக்கழகம்
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை


# குளவிக் கொட்டுக்கு இலக்காகி 7 பொலிஸார் வைத்தியசாலையில்

(ஹற்றன்)

கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறுக்கு ரம்பொடை பகுதியில் சட்ட விரோதமாக மதுபானம் தயாரிக்கப்படுகின்றது என்ற தகவலைத் தொடர்ந்து சுற்றிவளைக்கச் சென்ற பொலிஸ் குழுவினர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 7 பொலிஸாரில், முதலில் 3 பேர் 1990 சுவசரிய அம்புலன்ஸ் மூலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

பின்னர் மேலும் 4 பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் இருவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதுடன், எஞ்சியோர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், குளவிக்கூடு தானாக கலைந்ததா அல்லது யாரேனும் கலைத்ததா என்பது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி)


VCPL - 2026
ஏப்ரல் 11, 12, 13

Velanai Central Premier League

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர்களின்
வேலணை மத்தியின் பிரம்மாண்ட பெருவிளையாட்டுவிழா - 2026

வேலணை மத்தியின் பிரீமியர் லீக்

ஆண் அணிகள் – கிரிக்கெட் தொடர் – 6
பெண் அணிகள் – வலைபந்தாட்ட தொடர் – 1


ஏற்பாட்டாளர்–வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம்.
ஊடக அனுசரணை வலம்புரி




இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறை சாரணர் மாவட்ட கிளைச்சங்க அலுவலகத் திறப்பு விழா பருத்தித்துறை கந்த உடையார் ஒழுங்கையில் உள்ள கருணை இல்ல வளாகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. (படம்- மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கடஹர சதுர்த்தி




(யாழ்ப்பாணம்)

யாழ் வண் வடகிழக்கு கலட்டி வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு மூலஸ்தான பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)

# எரிபொருள் விலை உயர்வு மீனவர்கள் பெரிதும் பாதிப்பு

## வடமாகாண மீனவ பிரதிநிதி வர்ணகுலசிங்கம்



(கரணவாய்)

எரிபொருள் விலையேற்றத்தால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக வட மாகாண மீனவ பிரதிநிதி நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் தனது இல்லத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் போதிய எரிபொருள் கையிருப்பு உள்ளதாக தெரிவித்துவிட்டு திடீரென்று எரிபொருளுக்கு விலை அதிகரித்தமையை ஏற்றுக் கொள்ள முடியாது.

கடந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட அதே வேலைகளையே இந்த அரசாங்கமும் மேற்கொள்கின்றது.

தற்போதைய எரிபொருள் விலை ஏற்றத்தினால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

மண்ணெண்ணெய்க்கு விலை அதிகரிப்பு ஏற்பட்டிருக்கும் நிலையிலும் மீனவர்கள் கடற்றொழிலுக்கு சென்றால் அங்கு சட்டவிரோத மீன்பிடியாளர்கள் மற்றும் இந்திய உள்ளூர் அடிமடி (rollers) மீன்பிடியாளர்களினால் மீன் உற்பத்தியிடங்கள் அழிக்கப்பட்டுள்ளமையால் மீன் இன்மை காரணமாக வெறும் கையோடு திரும்ப வேண்டிய சூழல் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று தெரிவித்தும் இதுவரை எந்த விதமான இழப்பீடும் வழங்கப்படவில்லை.

வடமராட்சி கிழக்கு பகுதியில் கடலட்டை மற்றும் சுருக்கு வலை தொழில் செய்வதற்காக அனுமதி பெற்றுவிட்டு வடமராட்சி பகுதியில் கடலட்டை மற்றும் சுருக்கு வலை தொழிலில் ஈடுபடுவதாகவும் தெரிவித்தார். (8-60)

# விவசாயிகளுக்கான செயலமர்வு

(தருமபுரம்)

மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் "யானையுடன் இணைந்து வாழுதல்" என்ற தொனிப்பொருளில் மாவட்ட விவசாயிகளுக்கான பயிற்சி செயலமர்வு, கிளிநொச்சி வட்டக்கச்சியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் வீ.சோதிலட்சுமி தலைமையில் நடைபெற்ற பயிற்சி செயலமர்வில் வவுனியா பல்கலைக்கழகத்தின் உயிரியல் துறை விரிவுரையாளர் ச.விஜயமோகன் வளவாளராக கலந்து கொண்டார்.

இதன்போது யானை-மனித மோதலைத் தவிர்த்தல் தொடர்பாகவும் யானை சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டன.

குறித்த செயலமர்வில் விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். (8-316)

# சர்வதேச மகளிர் தினம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பெண்கள் பணியகமும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தினம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலர் ம.பிரதீபன் தலைமையில் "பெண்களின் தலைமைத்துவம் செழிப்பான தேசத்தின் பெருமை"எனும் தொனிப்பொருளில் நடைபெற்றது.

நிகழ்வில் பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கிலும் அவர்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான விற்பனை கண்காட்சி முன்னதாக விருந்தினர்களால் திறந்து வைக்கப்பட்டது. (8-33)

# தந்தை செல்வாவின் ஜனன தினம்

(வவுனியா)

தந்தை செல்வாவின் 128 ஆவது ஜனன தின நிகழ்வு வவுனியா மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் உள்ள அவரது நினைவுத்தூபியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தமிழரசுக்கட்சியின் வவுனியா கிளையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் அன்னாரது சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (8-250)

(மன்னார்)

தந்தை செல்வாவின் ஜனன தினம் நேற்று முன்தினம் இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் மன்னார் பஜார் பகுதியில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் சிலையடியில் இடம் பெற்றது.

இதன்போது அன்னாரது சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (8-285)



நல்லூர் கைலாசநாத பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழா நேற்றைய தினம் புதன்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. படங்கள்: ஐ.சிவசாந்தன்

# கோட்டக்கல்வி அலுவலகம் இடமாற்றம்

(முரசுமோட்டை)

கண்டாவளை கோட்டகல்வி அலுவலகம் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் புளியம்பொக்கனை பகுதியில் இயங்கி வந்த கிளிநொச்சி வடக்கு வலயத்திற்குரிய கண்டாவளை கோட்டக்கல்வி அலுவலகம் தற்போது கிளிநொச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (8-312)

# கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

நெடுந்தீவு முன்பள்ளிகளின் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான அபிவிருத்திசார் கலந்துரையாடல் அண்மையில் நெடுந்தீவில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் நெடுந்தீவில் இயங்கும் ஏழு முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், பள்ளி முகாமையாளர்கள், நலம்விரும்பிகள் கலந்து கொண்டு பயனுள்ள கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இதன்போது நெடுந்தீவின் முன்பள்ளித் தேவைகளைச் சீர்செய்ய மேற்கொள்ளச் சாத்தியமான செயற்பாடுகள், ஆசிரியர்களின் கல்வித் தகைமைகளை உயர்த்துதல் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றைப் பெற முன்னெடுக்கப்படத்தக்க பொருத்தமான வழிமுறைகள் பற்றியும் இன்றைய முன் பள்ளி ஆசிரியர்களின் சம்பளம் போதாமை குறித்து பள்ளி முகாமையாளர்களின தும்- அரசாங்கத்தினதும் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (8-30)

# தேசிய நேர்மை வாரம்

(வவுனியா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையின் கீழ் இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வவுனியா செட்டிக்குளம் சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை மற்றும் துட்டுவாகை முத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலைகளில் தேசிய நேர்மை வாரம் இடம்பெற்றது.

இதன்போது சிரமதானம், சித்திரம், கோலப்போட்டி, கதை கூறல் முதலான பல நிகழ்வுகள் நடைபெற்றன. (8-250)

# புத்தரிசி வழங்கும் நிகழ்வு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவடத்தில் புத்தரிசி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடை பெற்றது.

அநுராதபுரம் ஜயசிறி மகா போதியில் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய புத்தரி விழாவுக்கான புத்தரிசி வழங்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்கான நிகழ்வு இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தில் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.சுதர்ஸ்மன் தலைமையில் நடைபெற்றது.



இந் நிகழ்வில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் பா.தேவரதன், மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் செ.கவிதா, கமக்கார அமைப்புக்களை சார்ந்தோர், திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். (8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் - 2025

## யாழ்.மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றவர்கள்


உயிரியல் பிரிவு
யா/ஹாட்லி கல்லூரி
சந்திரபாபா ஹதுசன்


கணிதப் பிரிவு
யா/ஹாட்லி கல்லூரி
அனுராகாந்தன் விஸ்வகாந்தன்


வர்த்தகப் பிரிவு
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
பத்மலிங்கம் தருணிகா


கலைப் பிரிவு
மெதடிஸ் மகளிர் உயர்தரப் பாடசாலை
சுலக்ஷனா சுப்பிரமணியம்


தொழில்நுட்ப பிரிவு
யாழ்.ஊர்காவற்றுறை புனித
அந்தோனியார் கல்லூரி
தேவதாஸ் கிஷானி

## மன்னார் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றவர்கள்


உயிரியல் பிரிவு
புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை
அன்ரோனைனாஸ் வர்ணகுலசிங்கம்
சார்லஸ்



கணித பிரிவு
பெரியபண்டிவிரிச்சான் தேசிய பாடசாலை
பௌல் மெசியா குரூஸ் குளோடியன்ஸ் கிளாறட்


வர்த்தகப் பிரிவு
மன் இலுப்பைக்கடவை தேசிய பாடசாலை
டிரோன்சுதர்சன் டிதுர்சன்


கலைப் பிரிவு
மன்னார் முருங்கன் மத்திய கல்லூரி
திரஸ்ரன் அருண்குமார் யதுர்சிகா


தொழில்நுட்பப் பிரிவு
புனித சவேரியார் ஆண்கள் தேசிய
பாடசாலை
பி.பிரசாத்

## கிளிநொச்சி மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றவர்கள்


கணிதப் பிரிவு
கிளிநொச்சி மகா
வித்தியாலயம்
தெய்வேந்திரன் திருக்குமரன்


வர்த்தகப் பிரிவு
மதுமினி

## முல்லைத்தீவு மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றவர்கள்


விஞ்ஞானப் பிரிவு
முல்லைத்தீவு மகா
வித்தியாலயம்
எம்.நிதா பாத்திமா,


தணிதப் பிரிவு
ரூபகாந் கவியாளன்


வர்த்தகப் பிரிவு
முல்லைத்தீவு மகாவித்தியாலயம்
அன்ரனிற்றா நிலுஜினி அருள்
ஜெனிபேர்ட்

## வவுனியா மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றவர்கள்


விஞ்ஞான பிரிவு
இறம்பைக்குளம் மகளிர்
கல்லூரி
சஞ்சனா குணலிங்கம்


கலைப் பிரிவு
சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி
துவாரகா அல்லிராசா

## இலவச மருத்துவ முகாம்

(கரணவாய்)

யாழ்ப்பாண மருத்துவச் சங்கம் மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவப் பிரதிநிதிகள் சங்கம் இணைந்து நடாத்தும் 3 ஆவது இலவச மருத்துவ முகாம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இடம்பெறவுள்ளது.

இவ் இலவச மருத்துவ முகாமில் குருதி பரிசோதனை, இரத்த அழுத்தம், உடற் திணிவுச் சுட்டி போன்ற பரி சோதனைகளும் மேற்கொள்ளப்படும். (8-60)

## வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு

# பவுசர் மூலம் குடிநீர் விநியோகம்

(கொழும்பு)

**நிலவி வரும் வறட்சியான வானிலை காரணமாக, குறைந்த நீர் விநியோகத்தைக் கொண்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு குடிநீரை வழங்குவதற்காக பவுசர் வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.**

நீர் விநியோகத் தடைகள் காணப்படுமாயின், அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்காக "1939" என்ற துரித இலக்கத்திற்கு அறியத்தருமாறு நீர் வழங்கல் சபை பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.


தொடரும் வறண்ட வானிலைக்கு மத்தியில், சுத்தமான குடிநீருக்கான அணுகலை உறுதி செய்வதே தங்களின் முதன்மையான பொறுப்பு என நீர் வழங்கல் சபை தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## ஈரான் மீண்டு வருவதற்கு 20 ஆண்டுகள் வரை தேவைப்படும்

### ட்ரம்ப் விடுத்த பகீர் அறிக்கை



(வோஷிங்டன்)

அமெரிக்க மற்றும் இஸ்ரேலியப் படைகளின் தீவிரத் தாக்குதல்களுக்குப் பிறகு, ஈரான் மீண்டும் தன்னைக்கட்டியெழுப்ப 15 முதல் 20 ஆண்டுகள் வரை எடுக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஈரானின் இராணுவக் கட்டமைப்புகள் முற்றாகச் சிதைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

"அவர்களிடம் உள்ள சாத்தியமான அனைத்து வளங்களையும் அழிப்பதே எங்கள் நோக்கம். நாங்கள் அவர்களைப் பல ஆண்டுகள் பின்னோக்கித் தள்ளியுள்ளோம்," என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரானிடம் தற்போது கடற்படை, வான்படை, தரைப்படை என எதுவுமே இல்லை என்றும், அவர்களின் தொலைத் தொடர்பு மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்புகள் முற்றாக முடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஈரானிடம் தற்போது வழிநடத்தத் தலைவர்கள் எவருமில்லை என்றும் ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார்.

"அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வந்தால் நல்லது, வராவிட்டாலும் எங்களுக்குக் கவலையில்லை" என்று அவர் தனது பிடிவாதமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

ஈரான் மீதான இந்தத் தீவிரத் தாக்குதல்கள் மத்திய கிழக்கின் அரசியல் வரைபடத்தையே மாற்றியமைத்துள்ளதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (3)

## உத்தரவாதம்... போரை நிறுத்...

### ஈரான் ஜனாதிபதி

(டெஹ்ரான்) ------------------

**மீண்டும் தாக்குதல்கள் நடக்காது என்பதற்கான உறுதியான உத்தரவாதம் அளித்தால் போரை நிறுத்த தயார் என ஈரானிய ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியான் தெரிவித்துள்ளார்.**

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் அந்தோனியோ கோஸ்டாவுடன் நேற்று முன்தினம் மேற்கொண்ட தொலைபேசி உரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போரை நிறுத்த ஈரானிடம் "தேவையான விருப்பம்" உள்ளது.

ஆனால், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா மீண்டும் தாக்குதல் நடத்தாது என்பதற்கான பொறிமுறை அவசியமென பெசெஷ்கியான் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வாரம் அமெரிக்கா முன்வைத்த 15 அம்சத் திட்டத்திற்குப் பதிலடியாக, ஈரான் 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இதில் ஆக்கிரமிப்பை நிறுத்துவது பிரதான நிபந்தனையாகும்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் குற்றங்கள் தொடர்பில் ஐரோப்பா மௌனம் காப்பது அதன் மனித உரிமை கோரிக்கைகளுக்கு முரணானது என அவர் சாடியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் போர் ஆரம்பித்ததிலிருந்து ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் ஈரான் அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ளது.

அதன்படி, அமெரிக்க - இஸ்ரேலிய தாக்குதல்களில் இதுவரை குறைந்தது 249 பெண்கள் மற்றும் 216 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் 5 வயதுக்கும் குறைந்த

## விபத்துக்குள்ளான ரஷ்ய விமானம்

## 29 பேர் உயிரிழப்பு



(மொஸ்கோ)

கிரிமியா தீபகற்பத்தில் ரஷ்ய இராணுவ விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 29 பேரும் உயிரிழந்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

'An-26" ரகத்தைச் சேர்ந்த இந்த விமானம், சோவியத் காலத்து தயாரிப்பாகும்.

இது பொதுவாக இராணுவ சரக்குகள் மற்றும் சிறிய எண்ணிக்கையிலான வீரர்களை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்படுகிறது.

விமானத்தில் இருந்த 6 ஊழியர்கள் மற்றும் 23 பயணிகள் என மொத்தம் 29 பேரும் உயிரிழந்துள்ளனர்.

எவரும் உயிர் பிழைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விமானம் ஒரு மலை உச்சியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஏவுகணைத் தாக்குதல்கள் அல்லது ட்ரோன் தாக்குதல்கள் போன்ற வெளிப்புறக் காரணிகள் எதற்கும் ஆதாரங்கள் இல்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை அந்நாட்டு நேரப்படி சுமார் 6 மணியளவில் இந்த விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

நீண்ட தேடுதலுக்குப் பின்னரே அதன் சிதைவுகள் கண்டறியப்பட்டன. (3)

## ஈரானுடனான...

### ட்ரம்பிற்கு பாப்ப...

(வத்திக்கான்)

ஈரான் மீதான போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அதனை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சரியான வழியைக் கண்டறியுமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு பாப்பரசர் லியோ வேண்டுகோள் விடு[த்]துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த முதல் பாப்பரசரான லியோ, உரோமிற்கு அருகிலுள்ள காஸ்டெல் காண்டோல்போவில் ஊடகவியலாளர்களிடம் பேசுகையில் "ஜனாதிபதி ட்ரம்ப் போரை நிறுத்த விரும்புவதாகக் கேள்விப்பட்டேன். வன்முறையைக் குறை[ப்]பதற்கான வழியை அவர் கண்டறிவா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ம் அளித்தால் ...த்தத் தயார்!



17 குழந்தைகளும் அடங்குவர்.

சுமார் 113,000 பொது இடங்கள் (வீடுகள், பாடசாலைகள், வணிக வளாகங்கள்) சேதமடைந்துள்ளன.

தலைநகர் டெஹ்ரானில் மட்டும் பல்லாயிரக்கணக்கான கட்டடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஈரானிய செம்பிறை சங்கத்தின் 18 வசதிகள் மற்றும் 3 நிவாரண ஹெலிகொப்டர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளது.

ஈரான் மீதான தாக்குதல்களை ஐரோப்பா ஆதரிக்கவில்லை என ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் அந்தோனியோ கோஸ்டா தெரிவித்துள்ளார்.

போரினால் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து கவலை வெளியிட்ட அவர், இராஜதந்திர ரீதியில் தீர்வுகாணுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (3)

## மூன்று வாரங்களுக்குள் ஈரான் போர் முடிவுக்கு வரும்

## டொனால்ட் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

ஈரான் மீதான இராணுவத் தாக்குதல்களை இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் அமெரிக்கா முடிவுக்குக் கொண்டுவரக்கூடும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "நாங்கள் மிக விரைவில் வெளியேறுவோம். இது இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் நடக்கலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

போரை நிறுத்துவதற்கு ஈரான் ஏதேனும் உடன்படிக்கையை எட்ட வேண்டுமா என்ற கேள்விக்கு, "இல்லை, ஈரான் என்னுடன் எந்த ஒப்பந்தமும் செய்ய வேண்டிய அவசியமில்லை" என அவர் பதிலளித்துள்ளார்.

அமெரிக்காவின் 15 அம்ச போர்நிறுத்தத் திட்டத்தை ஈரான் ஏற்காவிட்டால் தாக்குதல் தீவிரப்படுத்தப்படும் என வோஷிங்டன் முன்னர் எச்சரித்திருந்தது.

ஆனால், தற்போது ட்ரம்ப் நிபந்தனையின்றி வெளியேறுவது குறித்துப் பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம், ஈரானுடன் ஒப்பந்தம் செய்ய ட்ரம்ப் தயாராக இருப்பதாக அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்செத் தெரிவித்துள்ளார். (3)

## ...ன போரை நிறுத்துமாறு ...ப்பரசர் லியோ வேண்டுகோள்


என நம்புகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆற்றிய உரையில், போரை ஆரம்பிப்பவர்களின் கைகள் "இரத்தத்தால் படிந்துள்ளன" எனவும், அவர்களின் பிரார்த்தனைகளை கடவுள் ஏற்பதில்லை எனவும் பாப்பரசர் மிகவும் காட்டமாகத் தெரிவித்திருந்தார்.

எதிர்வரும் 5ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக இந்த வன்முறைகள் முடிவுக்கு வர வேண்டும் என அவர் தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

"அப்பாவிச் சிறுவர்கள் உட்பட ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமைதிக்காக நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (3)



## ஈராக்கில் கடத்தப்பட்ட அமெரிக்க பெண் ஊடகவியலாளர்

## தேடுதல் வேட்டை தீவிரம்

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் பிரபல அமெரிக்கப் பெண் ஊடகவியலாளர் ஷெல்லி கிட்டிலெசன் அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மத்திய கிழக்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் பாக்தாத்தின் மையப்பகுதியில் வைத்து ஷெல்லி கிட்டிலெசன் கடத்தப்பட்டுள்ளார்.


பல்வேறு சர்வதேச விருதுகளைப் பெற்ற இவரை மீட்பதற்கான நடவடிக்கைகளில் ஈராக் பாதுகாப்புப் படையினர் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய கிழக்கில் நிலவும் பாதுகாப்பற்ற சூழலைக் கருத்திற்கொண்டு, ஷெல்லி கிட்டிலெசன் ஈராக்கிற்குச் செல்ல வேண்டாம் என்றும், அது அவரது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்றும் அமெரிக்க அரசு ஏற்கனவே எச்சரித்திருந்தது. இந்த எச்சரிக்கையையும் மீறி அவர் அங்கு சென்றிருந்த நிலையிலேயே இந்தக் கடத்தல் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடத்தல்காரர்களைக் கண்டறிய பாக்தாத்தின் தெற்குப் பகுதியில் பாரிய தேடுதல் வேட்டை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிச்சக்கரவர்த்தி கம்பரின் நினைவுதினம்



(வவுனியா)

வவுனியாவில் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் நினைவுதினம் நேற்றைய தினம் மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது கவிச்சக்கரவர்த்தி கம்பனின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களினாலும், தமிழ்மணி அகளங்கனாலும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் தொடர்பான நினைவுப் பேருரைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மாநகரசபை ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1984-இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>1இல் செவ்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: BA, Contruction<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16669 | பிறப்பு:2005-இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, Bank officer<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/16700 |
| பிறப்பு:1989-இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc, Financial Assistant(London)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16670 | பிறப்பு :1995 - இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 52 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் - BSc, Software Engineer (pvt)<br>எதிர்பார்ப்பு - தகுதியான ஆண்<br>தொ.இ: G/16627 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி-பா : 54<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்- A/L, Shop<br>எதிர்பார்ப்பு: தகுதியானபெண்<br>தொ.இ: B/16672 | பிறப்பு: 1997-இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 64<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: NVQ Level 4<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/16633 |
| பிறப்பு: 1999- இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>12இல்செவ்<br>கி-பா: 42<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்- MSc, Sales Manager (UK)<br>எதிர்பார்ப்பு: PR உள்ளவர்<br>தொ.இ: B/16673 | பிறப்பு: 1995-RC<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>1இல்செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு : அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16609 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி-பா: 32 1/4<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: O/L, Driver (own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16676 | பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா: 12 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSc,Teacher<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/14939 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 562



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கருவியை விழுங்கலாம்!

ஒரு டாக்டரிடம் போகிறீர்கள்! வயிறு வலிக்கிறது என்று சொல்கிறீர்கள்! அவர் உங்களை சோதித்துப் பார்க்கிறார்! பார்த்துவிட்டு, ஏதாவது ஒரு மாத்திரையைக் கொடுத்து "விழுங்கு!" என்று சொன்னால் விழுங்கி விடுவீர்கள்! மாத்திரைக்குப் பதிலாக டாக்டர் ஒரு 'தையல் மிஷினை"க் கொடுத்து அதை விழுங்கு என்று சொன்னால் என்ன செய்வீர்கள்?

நீங்கள் முழிப்பீர்கள். அல்லது டாக்டரையே சந்தேகமாகப் பார்ப்பீர்கள்!

ஆனால் வருங்காலத்திலே நோயாளி தையல் மிஷினை விழுங்குவது ரொம்ப சர்வ சாதாரணமாக போய்விடும் போல இருக்கு!

என்ன இது- நீங்கள் எல்லாம் என்னையே சந்தேகமாக பார்க்கிறது மாதிரி தெரியுது! சந்தேகப்படாதீர்கள்!

நான் சொல்வது தையல் மிஷின் ரொம்பப் பெரிதாக இருக்காது! சின்னதாக இருக்கும். விழுங்கக் கூடிய அளவிலேதான் இருக்கும். இது துணியைத் தைக்காது. வயிற்றுக்குள்ளே போய் தையல் போடும். இதை நுண்ணிய தையல் இயந்திரம் என்று சொல்லலாம்! ஒரு நோயாளிக்கு வயிற்றிலே தையல் போட வேண்டியிருக்கு என்று வையுங்கள். அவரிடம் இந்த சிறிய கருவியைக் கொடுத்து விழுங்கச் சொல்லுவார்கள். அவர் அதை சரியாக செய்து விடுவார். கருவி உள்ளே போகும். டாக்டர் வெளியிலே இருந்துகொண்டே அதற்கு உத்தரவு கொடுத்துக் கொண்டிருப்பார்.

வயிற்றுக்குள்ளே எந்த இடத்திலே தையல் போட வேண்டுமோ அந்த இடத்திலே சரியாக அந்தக் கருவி தையல் போட்டுவிடும். நைலான் நூலாலேயே தையல் போடும்.

பிரிட்டிஷ் டாக்டர்கள் இந்த கருவியை உருவாக்கியிருக்கிறார்கள்.

இந்த கருவியுடைய நீளம் 5 செ.மீற்றர். குறுக்களவு சுமாராக 11 மில்லி மீற்றர், அவ்வளவுதான். கடுமையான வயிற்றுப் புண்.. அல்சர் இதுமாதிரி விடயத்துக்கெல்லாம் வயிற்றுக்குள்ளே தையல் போட வேண்டிய அவசியம் வரும்போது, இது ரொம்ப உபயோகமாக இருக்கும்.

அறுவை சிகிச்சையே தேவையில்லாமல் போய்விடுகிறதே. அது ஒரு பெரிய வசதி இல்லையா?

வயதானவர்களுக்கு வயிற்றுப் புண் வந்து அறுவை சிகிச்சை செய்தால் அது குணமாக அதிக நாளாகும். அவர்களுக்கெல்லாம் இந்தக் கருவி ரொம்ப உபயோகம்!

இந்தத் தையல் கருவியின் நுனியிலே ஒரு அகநோக்குக் கருவி இருக்கும் - Endoscope! கண்ணாடி இழையாலே ஆன மெல்லிய குழாய் இது. இதனுடைய வெளி முனையிலேயிருந்து பார்த்தால் வயிற்றுக்குள்ளே உள்ள நிலைமை என்ன, எப்படி என்கிறது தெரிந்துவிடும்!

டாக்டர் இது மூலமாக பார்த்து விடயத்தைத் தெரிந்து கொள்வார். அதன்பின்பு வயிற்றுக்குள்ளே இருக்கிற கருவிக்கு ஆணையிடுவார். உடனே அந்த தையல் கருவி தானாகவே வேலை செய்ய ஆரம்பிக்கும்! வயிற்றுப்புண் உள்ள இடத்திலே இரண்டு பக்கத்திலேயிருந்தும் திசுக்களை உள்ளே இழுத்து, நைலான் நூலைக் கொண்டு, தையல் போட்டுவிடும்.

இதே அடிப்படையிலே இன்னொரு கருவியை தயாரிப்பதற்கும் ஆராய்ச்சியாளர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்களாம்.

ஸ்ரெப்லர்... பேப்பர் அல்லது புத்தகங்களை சேர்த்து பின் போடுவதற்கு உபயோகப்படுத்துகிறோம். அது மாதிரி ஒரு கருவி.

வயிற்றுக்குள்ளேயே ஒரு சின்ன மருந்துக் குப்பியை கொண்டு போய் தேவையான இடத்திலே வைத்து தைத்து விடுவது அதாவது Stapler Pin போடுவது மாதிரி போட்டு விட்டுவிடுவது!

அது அங்கேயே இருந்துகொண்டு கொஞ்சம் கொஞ்சம் மருந்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். பல வியாதிகளுக்கு இது உபயோகப்படும்.


ஆகக்கூடிய மாத்திரை விழுங்குவது மாதிரி வருங்காலத்திலே சின்ன சின்ன கருவிகளையெல்லாம் விழுங்குவதற்கு நோயாளிகள் தயாராக இருக்க வேண்டும். அதற்கு பயிற்சி எடுத்துக்கொள்வது மாதிரி.. இப்பல்லாம் சிலபேர் தவறுதலாக சிலதை விழுங்கிவிடுவது உண்டு. ஒரு பையன், இப்படித்தான் ஒரு நாள், அவங்க குடும்ப டாக்டருக்கு ஃபோன் செய்தான் - ரொம்ப அவசரமாக!

"டாக்டர்... நீங்கள் உடனே புறப்பட்டு எங்கள் வீட்டுக்கு வர வேண்டும்.. ரொம்ப அவசரம்... எங்கள் வீட்டு சாப்பாட்டு மேசையிலே நான் வைத்திருந்த சின்ன பென்சிலை எங்கள் அப்பா தவறுதலாக எடுத்து விழுங்கிவிட்டார் டாக்டர்.. உடனே வாருங்கள்! என்றான்.

டாக்டர் உடனே அதற்கான உபகரணங்களையெல்லாம் எடுத்துக் கொண்டுப் புறப்பட்டார். அதற்குள்ளேயே மறுபடியும் ஃபோன்கால். அதே பையன் தான் பேசினான்: "டாக்டர்! நீங்கள் வரவேண்டியதில்லை. பிரச்சினை தீர்ந்து விட்டது!" என்றான். "எப்படி?" என்று கேட்டார் டாக்டர். "நான் எழுதுவதற்கு வேறு ஒரு பென்சில் கிடைத்து விட்டது!" என்றானாம் பையன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழா



(தருமபுரம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பங்குனி உத்திர பொங்கல் விழா நேற்றைய தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.



நிகழ்வில் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தங்கள் நேர்த்திகடன்களை நிறைவேற்றியிருந்தனர். (8-316-312)

# ஒலியமைப்புச் சாதனங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயத்திற்கான ஒலியமைப்புச் சாதனங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கனடா, மொன்றியல் வாழ் தமிழ் தேசியத்திற்கான வேர்கள் அமைப்பின் நிதி அனுசரணையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் குறித்த ஒலியமைப்புச் சாதனங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (8)

# உதவிப் பொருட்கள் வழங்கி வைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பகுதியில் தேவைப்பாடுடைய 21 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் உதவிப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ரோட்டரி மாவட்டத்தினுடைய நிதிப் பங்களிப்புடன் மட்டுவில்மோகனதாஸ்சன சமூக நிலையம் ஊடாக மேற்படி உதவித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (8-30)

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய (ஸ்ரான்லி கல்லூரி) பழைய மாணவர் சங்க பொதுச்சபைக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் சூடாமணி அகிலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பொதுச்சபைக்கூட்டத்தில் ஆயுட்கால அங்கத்தவர்களையும் புதிதாக இணைய விரும்பும் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 100 | 150 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | -- | 200 | -- |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 350 | 250 | 250 |
| தக்காளி | 150 | 100 | 120 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 140 | 200 | 200 |
| கோவா | 100 | 100 | 100 | 200 | 160 |
| கரட் | 300 | 440 | 300 | 400 | 400 |
| பூசணி | 120 | 120 | 90 | 100 | 100 |
| புடோல் | 150 | 150 | 120 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 150 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250 | 350 | 200 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | -- | 200 | 180 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 200 | 180 |
| கருணைக் கிழங்கு | 300 | 300 | 200 | 400 | -- |
| பயற்றங்காய் | 250 | 300 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 280 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 150 | 100 | 200 | 200 | 150 |
| முருங்கைக்காய் | 1500 | 3000 | 2000 | 2000 | 2000 |
| போஞ்சி | 350 | 300 | 250 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | -- | 150 | -- |
| கீரை – 1 பிடி | 150 | 80-140 | 80 | 100 | -- |
| தேசிக்காய் | 300 | 250 | 400 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-160 | -- |
| இராசவள்ளி | 450 | 400 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | 300 | 250 | 80 | 400 | -- |
| முள்ளங்கி | 120 | 140 | 100 | 200 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 70 | -- | 60 | -- |
| வல்லாரை | 60 | 60 | -- | 80 | -- |
| ஈரப்பலா | -- | 150 | 150 | 200 | -- |


# இராசிபலன்

02.04.2026
பங்குனி 19, வியாழக்கிழமை
பூரணை முற்பகல் -7.47 மணிவரை

அத்தம் பிற்பகல் - 5.39 மணிவரை
சுப நேரம் -7.41 -9.11 மணிவரை
இராகு காலம் -1.41 -3.11 மணிவரை

சந்திராஷ்டமம்
சதயம், பூரட்டாதி.


வளவன்


மேஷம்


கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மாறும், ஆரோக்கியம் சீராகும்.


கடகம்


வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


துலாம்

ஒரு சில வேலைகளுக்காக சில மணி நேரங்கள் காத்திருக்க நேரிடலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், தேவையற்ற குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது.


மகரம்

ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.


ரிஷபம்


பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மன அமைதி காண வேண்டிய நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.


சிம்மம்

குடும்பத்தில் குதூகலம் கூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


கும்பம்

மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, வழிபாடு மகத்துவம் தரும், வீண் விரயங்கள் ஏற்படலாம்.


மிதுனம்

பொதுக் காரியங்களில் ஆர்வம் கூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு.


கன்னி

பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


தனுசு

தொழில் ரீதியாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


மீனம்

ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள்.

ஒருவன் உயரத்தில் பறக்க உதவும் பட்டமே கற்பனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1011





அச்சமயம் உச்சநிலையை அடைந்திருந்த புயற்காற்றும், புயலில் பொங்கி வந்த கடலும் போட்ட இரைச்சலினால் அவர் கூறியது முருகய்யன் காதில் விழவில்லை. ஆயினும் இளவரசரின் முகத்தோற்றத்திலிருந்து அவருடைய விருப்பத்தை அறிந்து கொண்ட முருகய்யன் படகைச் செலுத்தத் தொடங்கினான்.

சூடாமணி விஹாரத்தின் முழுகிக் கொண்டிருந்த மண்டபச் சிகரங்களின் மீதும் புத்தர் சிலைகளின் மீதும் மோதாமல் படகைச் செலுத்துவது மிகவும் கடினமாயிருந்தது. முருகையன் பெரும் புயலிலும் சுழிக் காற்றிலும் நடுக் கடலில் படகு செலுத்திப் பழக்கப் பட்டவனாதலால் வெகு லாவகமாகச் செலுத்திக் கொண்டு போனான்.

அதைப் பார்த்து இளவரசர் வியந்தார். அவனுக்குச் சற்று உதவி செய்யலாம் என்று அவருக்குத் தோன்றியது. ஆனால் புத்த பிக்குவைப் பிடித்திருந்த பிடியை விட்டுவிடத் தயங்கினார். அதற்கு ஏற்றாற்போல், திடீரென்று பிக்கு இளவரசருடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளப் பிரயத்தனம் செய்தார்.

அச்சமயம் படகு புத்த பகவானின் சிலையின் அருகே போய்க் கொண்டிருந்தது. இப்போது கடல் வெள்ளம் அச்சிலையின் கண்கள் வரை ஏறியிருந்தது. இன்னும் சில நிமிடத்தில் சிலையே முழுகிவிடும் என்பதில் ஐயமில்லை. இளவரசர் பிக்குவை இறுகப் பிடித்துக் கொண்டார். பார்ப்பதற்கு மிக மென்மையான தேகம் உடையவராகக் காணப்பட்ட இளவரசரின் கரங்களில் எவ்வளவு வலிமை இருந்தது என்பதை அறிந்து பிக்கு வியந்தார் என்பதை அவருடைய முகத் தோற்றம் காட்டியது. நெஞ்சிலே உரம் இருந்தால், உடலிலும் வலிமை உண்டாகும் போலும்! இத்தனைக்கும் பல நாள் சுரத்தினால் மெலிந்திருந்த உடம்பு! புத்தரின் சிலையைத் தாண்டிப் படகு போயிற்று. முழுகிக் கொண்டிருந்த அச்சிலையைப் பிக்கு பார்த்துக் கொண்டேயிருந்தார். சிலை விரைவில் மறைந்தது: பிக்குவின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகியது.

"இளவரசே! என்ன காரியம் செய்தீர்?" என்றார் பிக்கு. அவருடைய உதடுகளின் அசைவிலிருந்து என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொண்ட இளவரசர் பிக்குவின் காதின் அருகில் குனிந்து, "சுவாமி! அந்தக் கேள்வியை நான் அல்லவா கேட்க வேண்டும்? என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள்?" என்றார்.

"இளவரசே! இந்த விஹாரம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து இங்கே இருந்து வருகிறது. மகானாகிய தர்மபாத முனிவரின் காலத்திலே கூட இருந்தது. வீர சைவர்களான பல்லவ சக்கரவர்த்திகள் இதை அழிக்காமல் விட்டு வைத்தார்கள். அப்படிப்பட்ட புராதன விஹாரம் என் காலத்தில், என் கண் முன்னால் முழுகி விட்டது. செங்கல் திருப்பணியினாலான இந்த விஹாரம் இந்தக் கடல் வெள்ளத்துக்குத் தப்ப முடியாது! வெள்ளம் வடிந்த பிறகு சில குட்டிச் சுவர்களே மிச்சமிருக்கும்! விஹாரம் போன பிறகு நான் மட்டும் எதற்காக உயிரோடு இருக்க வேண்டும்?" என்றார் பிக்கு.

"விஹாரம் இடிந்து அழிந்தால், மறுபடியும் திருப்பணி செய்து கட்டிக் கொள்ளலாம். புத்த பகவானுடைய சித்தமிருந்தால் நானே திரும்பவும் கட்டிக் கொடுப்பேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## சாக்ஸின் தந்திரம்



(நேற்றைய தொடர்ச்சி)

இரண்டும் மகிழ்ச்சியாய் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றன.

சில நாட்கள் சென்றன. சாக்ஸும் பாக்ஸும் வழக்கம் போல வெளியே புறப்பட்டன.

சிறிது நேரத்திற்குப்பின் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து ஓய்வெடுத்தபடி பேசிக் கொண்டிருந்தன.

அப்போது அந்தப் பக்கமாக இரண்டு மான்கள் நடந்து வந்து கொண்டிருந்தன.

"சாக்ஸ், இரண்டு மான்கள் வந்து கொண்டிருக்கின்றன. மான்கறி சாப்பிட்டு ரொம்ப நாள் ஆகிவிட்டது. நம்ம திட்டத்தை செயற்படுத்த வேண்டியது தான். பாக்ஸ் மகிழ்ச்சியுடன் அதற்கு ஒப்புக் கொண்டது.

இரண்டும் மான்களின் அருகே சென்று பேச்சுக் கொடுத்தன. வழக்கம்போல சாதாரணமாக பேசிக்கொண்டிருந்த சாக்ஸும் பாக்ஸும் பேச்சை வேறு திசைக்கு திருப்பின. பாக்ஸ் இரண்டு மான்களில் ஒரு மானைப் பார்த்து அதன் அழகைப் புகழ்ந்தது.

இரண்டு பேரிலே நீ தான் ரொம்ப அழகா இருக்கிறாய். இதைக் கேட்ட மற்றொரு மானிற்கு கோபம் வந்தது. "அப்போது நான் அழகாக இல்லையா?". இல்ல, நீ கொஞ்சம் அழகாகத்தான் இருக்கிறாய்" அந்த மான் உடனே சாக்ஸிடம் கேட்டது. நீ சொன்னா சரியாக இருக்கும். நான் அழகா இல்லையா?" சாக்ஸும் பாக்ஸின் கருத்தை ஆமோதித்தது. ஆமாம், நீ சுமாராகத் தான் இருக்கிறாய். இப்போது அழகான மான் மற்றொரு மானைப் பார்த்துச் சொன்னது.

"அதான் இரண்டு பேரும் சொல்லி விட்டார்களே. நான் மட்டும் தான் அழகு, நீ சுமாராகத்தான் இருக்கிறாய் என்று. ஏன் திருப்பித் திருப்பி அதையே கேட்கிறாய்?

"அவர்கள் சொன்னால் என்ன? உன்னை விட நான் தான் அழகு. "சாக்ஸும் பாக்ஸும் நினைத்தபடியே இரண்டு மான்களுக்கும் வாய்ச் சண்டை உருவானது. சில நிமிடங்களில் இரண்டும் கடுமையாக சண்டையிட்டுக் கொண்டன. சண்டையில் ஒரு மான் பலத்த அடிபட்டு கீழே விழுந்தது. மற்றொரு மான் அந்த இடத்தில் இருக்கப் பிடிக்காமல் ஓடிப் போனது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

> இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்.
>
> – திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நிலமெனும் நல்லாள் நகுவது காணீரோ!

மத்திய கிழக்கில் மூண்ட யுத்தம் காரணமாக இலங்கையில் பொருளாதார நிலைவரம் மிக மோசமாகி வருவதை யாவரும் உணர்ந்து கொள்வர். இதற்கு மூலகாரணம் எரிபொருள் விலையேற்றமாகும்.

ஆம், எரிபொருளின் விலை வாரத்துக்கு வாரம் உயர்ந்து செல்வதால், அதனூடு அனைத்துப் பொருட்களினதும் விலைகள் உயரத் தொடங்கியுள்ளன.

அதிலும் உணவுப் பொருட்களின் விலையேற்றம் சாதாரண மக்களின் சீவனோபாயத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும்.

உண்மையில் எரிபொருள் விலையேற்றம் என்பது அமெரிக்காவும் இஸ்ரேலும் சேர்ந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தியதால் ஏற்பட்டதாகும்.

இவ்வாறு எரிபொருள் விலையேற்றம் ஏற்பட்ட கணத்திலேயே இலங்கையில் உணவுப் பொருட்களின் விலைகள் எகிறத் தொடங்கிவிட்டன எனும்போது, விவசாயத்தில் – உணவுத் தானியப் பயிரிடலில் நாம் பின்னடைந்துள்ளோம் என்பது தெரியவரும்.

உண்மை. ஒரு காலத்தில் இலங்கையில் பிரதானமாக இருந்த விவசாயத் துறையை நாம் கைவிட்டுவிட்டோம்.

அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதார எழுச்சி என்பது கைத்தொழில் மற்றும் சேவைத் துறையால் ஏற்பட்டதென்ற தவறான முடிவுகள் நம் நாட்டின் உயிர்மூச்சாகிய விவசாயத்தைக் கைவிடுகின்ற அளவுக்கு நிலைமையை ஆளாக்கியது.

அதிலும் எங்கள் தமிழர் தாயகம் யுத்த சூழ்நிலை காரணமாக விவசாயத்தைக் கைவிட்டு மக்கள் புலம்பெயருகின்ற இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாகினர்.

இங்கு புலம்பெயர்வு என்பது சொந்த நாட்டுக்குள் ஏற்பட்ட இடப்பெயர்வையும் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றதையும் இணைத்துப் பார்க்கும்போது, உள்ளூரில் இருந்த நம் மக்கள் தங்கள் இல்லிடத்தை – வேளாண் செய் விவசாய நிலத்தைக் கைவிட்டு வெளியேறியதன் காரணமாக அருமந்த விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாயின.

இதுதவிர, பொன் விளையும் எங்கள் விவசாய நிலங்களில் கணிசமானவை படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு அது நீண்ட காலம் கடந்து போக, எங்கள் மக்கள் விவசாயத்தை மெல்ல மெல்ல மறந்தனர்.

இப்போது அவர்கள் கல்வியினூடு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வெளிநாட்டில் உயர்பட்டப் படிப்பு என்ற புதிய வாழ்வியல் கலாசாரத்துக்கு ஆளாகியுள்ளனர்.

தவிர, தாயகத்தில் எஞ்சியிருப்பவர்களும் வர்த்தகம் மற்றும் சேவைத் துறையை நோக்கிப் பயணிக்கத் தலைப்பட்டுவிட்டனர்.

இதனால் ஈரானில் குண்டு விழ, இங்கு உணவுப் பொருட்களின் விலைகள் ஏறுகின்ற பரிதாப நிலைமை உருவாகியுள்ளது.

ஆம், அனைத்துப் பொருட்களுக்கும் வெளிநாட்டை நம்பியிருந்தால், எந்த நாட்டில் வில்லங்கமென்றாலும் அது நம்மைத் தாக்கவே செய்யும்.

இங்குதான் நிலமகள் நம்மைப் பார்த்து நகுகின்றாள்.

# நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் பரீட்சைகள் அனைத்தும் நடைபெறும்

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

2026ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில், உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளை அறிவிக்கப்பட்ட திகதிகளிலேயே நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதமே 2026 பரீட்சைத் திகதிகள் அறிவிக்கப்பட்டதாகவும் மாணவர்கள் அதற்கேற்பத் தயாராகுமாறும் கேட்டுக்கொண்டார்.

கடந்த காலங்களில் பரீட்சை திகதிகள் மாறியதால் மாணவர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டதால் இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திகதிகளிலேயே பரீட்சைகள் நடத்தப்படும் என்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி 2026ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 09 ஆம் திகதியும் உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் 10 ஆம் திகதியும் மற்றும் சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் மாதம் 08 ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை 2025 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சைகள் ஏப்ரல் 22 முதல் 30 வரை நடைபெறவுள்ளன. *(ம-7)*

# சர்வதேச நிதி நிறுவனங்களின் பிடியில் அடிமைகளாக சிக்காதீர்

### அரசுக்கு சஜித் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் சர்வதேச நிதி நிறுவனங்களின் பிடியில் சிக்கி அடிமையாகாமல் உடனடியாக மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய நலன்புரித் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

விசேட கூற்றொன்றை முன்வைத்து நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எண்ணெய் விலை மற்றும் மின்சாரக் கட்டணங்கள் மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளதால் 2 கோடியே 20 இலட்சம் மக்களும் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகியுள்ளனர். குறிப்பாக ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பாதுகாப்பு அற்ற நிலையில் உள்ள குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் தாய்மார்களுக்காக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்துடன் கலந்தாலோசித்து விசேட வேலைத் திட்டமொன்றை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

விவசாயத்துறை பாரிய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர்,

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் இணைந்து நெல், சோளம், தேயிலை உள்ளிட்ட பயிர்ச்செய்கைகளுக்குத் தேவையான உரம் மற்றும் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

சிறுபோக பருவம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் விதை மற்றும் யூரியாவிற்கு ஏற்பட்டுள்ள கடும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமாறும் அவர் கோரினார். *(ம-7)*

## நூல் வெளியீட்டு விழா

(பருத்தித்துறை)

காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி பரராஜசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக தென்புலோலியூர் பரா. ரதீஸ் அவர்கள் எழுதிய "அன்புள்ள அம்மாவிற்கு ஒரு (கவி) சிரிப்பு" எனும் நூலின் வெளியீட்டு விழா நாளை (03) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இளங்கோ கழகத்தின் ஆலோசகரும் ஓய்வு நிலை பிரதி அதிபருமான [illegible] அவர்களின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள விக்டோரியன் சுகாதார கட்டிட ஆணையத்தின் நிர்வாக இயக்குநர் தணிகாசலம் சிவதாசன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி குலசங்கர் கிருஷ்ணலதா சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் தொடர்பான நயப்புரையினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் செந்தமிழ் சொல்லருவி [illegible] அவர்கள் நிகழ்த்தவுள்ளனர். *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு மட்டக்குளியில் கூரிய ஆயுதத்தினால் தாக்கி ஒருவர் கொலை

(கொழும்பு)

கொழும்பு மட்டக்குளி - கெமுனுபுர பகுதியில் கூரிய ஆயுதத்தினால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இருதரப்பினரிடையே ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து குறித்த நபரின் வீட்டிற்குச் சென்ற சிலர் கூரிய ஆயுதத்தினால் தாக்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்குளிப் பகுதியை சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். *(ம-7)*

## காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, ஆயித்தியமலை பொலிஸ் பிரிவில் விவசாயி ஒருவரைக் காட்டு யானை தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

புதுமண்டபத்தடி முண்டாளமடு பகுதியில் வசிக்கும் 69 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

வயலில் விவசாய வேலைகளை செய்து கொண்டு காவலுக்காக கூலி தொழில் செய்து வந்த போதே குறித்த பகுதிக்குள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (31) நுழைந்த காட்டு யானை இவரை தாக்கியுள்ளது. *(ம-7)*

# கடுமையான விதிகளுடன் இலங்கையில் அமுலாகிறது புதிய சட்டம்

(கொழும்பு)

ஒருங்கமைக்கப்பட்ட குற்ற வாளிகளுக்கு எதிராக மிகக் கடுமையான விதிகளைக் கொண்ட புதிய சட்டமொன்று கொண்டு வரப்படவுள்ளதாக மத்திய குற்ற விசாரணை பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரணமால் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இப்புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய சட்டத்தின் விதிகளினூடாக சிறையிலுள்ள குற்றவாளிகளை மீண்டும் பொலிஸார் பொறுப்பேற்று விசாரணைகளை முன்னெடுக்க முடியும்.

இவ்வாறான நபர்களை இன்றுங்கூட, நாம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே தடுத்து வைத்துள்ளோம். இது தொடர்பாக இன்னும் இரண்டு வாரங்களுக்குள் மிகக் கடுமையான சட்டம் ஒன்று வரவுள்ளது.

இது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்காகவே பிரத்தியேகமாக உருவாக்கப்பவுள்ளது. குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டு சிறையிலிருக்கும் பலர் உள்ளனர்.

பல குற்றங்களுடன் தொடர்புடைய இவர்களின் பெயர்களைக் கேட்டவுடனே மக்கள் பீதியடைவதுண்டு. இவ்வாறானவர்களை சிறையிலிருந்து வெளியே கொண்டு வந்து பொலிஸ் காவலில் விசாரணை நடத்தும் அதிகாரத்தை இந்தப் புதிய சட்டம் பொலிஸாருக்கு வழங்குகிறது.

வெளிநாடுகளில் இருப்பவர்களின் சொத்துக்களை முழுமையாக முடக்குவதற்கும் தற்போது சட்டம் உள்ளது என குறிப்பிட்டுள்ளார். (நி)

# பங்களாதேஷ் சிறையிலிருந்து இலங்கை மீனவர்கள் விடுவிப்பு

(கொழும்பு)

பங்களாதேஷ் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, கடந்த ஆறு மாதங்களாக அந்நாட்டின் பொலிஸ் காவலில் இருந்த ஆறு இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட ஆறு மீனவர்களும் இன்று காலை இலங்கையை வந்தடைய உள்ளனர் என கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்கள் கடந்த 2025 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் திகதி 'சுது துவா 4' என்ற பல நாள் மீன்பிடி படகில் கடலுக்குச் சென்றிருந்தனர்.

கடல் எல்லைகளை மீறிய குற்றச்சாட்டில் பங்களாதேஷ் கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டு, சிட்டாகாங் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் பங்களாதேஷிலுள்ள இலங்கை தூதரகம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த இராஜதந்திர முயற்சிகளின் பலனாகவே இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (நி)

# LOLC நிறுவனம் SLIM Kantar 2026 விருதுகளில் "மக்களின் நிதி சேவை வர்த்தக நாமம்" பட்டத்தை வென்றுள்ளது




SLIM Kantar People's Choice Awards 2026இல் LOLC ஹோல்டிங்ஸ் பிஎல்சி தொடர்ந்து பத்தாவது ஆண்டாக "ஆண்டின் சிறந்த மக்கள் நிதிச் சேவை நிறுவனம" என்ற பட்டத்தை வென்று, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லை எட்டியுள்ளது. இந்த குறிப்பிடத்தக்க சாதனை, பத்தாண்டுகால அசைக்க முடியாத மக்கள் நம்பிக்கையைக் குறிப்பதோடு, மற்ற அனைத்தையும் விட இலங்கையர்கள் தொடர்ந்து தேர்ந்தெடுக்கும் நிதிச் சேவை நிறுவனமாக LOLC உறுதியாக நிலைநிறுத்துகிறது.

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் மற்றும் காண்டார் வழங்கும் மக்கள் தேர்வு விருதுகளின் தனிச் சிறப்பு என்னவென்றால், அவை வர்த்தகநாம நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வில் உலகளாவிய முன்னணி நிறுவனமான காண்டார் நடத்தும் சுதந்திரமான நுகர்வோர் ஆராய்ச்சியின் மூலம் முழுமையாகத் தீர்மானிக்கப்படுகின்றன.

இந்த அங்கீகாரம், பொதுமக்களின் கருத்து, வர்த்தகநாம நினைவு மற்றும் வாடிக்கையாளர் விசுவாசம் ஆகியவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இது ஒரு வர்த்தகநாமத்திற்கு மக்களுடன் உள்ள உண்மையான தொடர்பின் மிகவும் நம்பகமான குறிகாட்டிகளில் ஒன்றாக அமைகிறது.

ஒரு தசாப்த காலமாக "மக்களின் நிதிச் சேவைகள் வர்த்தகநாமம்" என்ற மறுக்கமுடியாத நிலையை அடைந்திருப்பது, அனைத்து இலங்கையர்களுடனும் LOLC கொண்டுள்ள நீடித்த உறவையும், தலைமுறைகளைக் கடந்து நீடிக்கும் நம்பிக்கையைத் தக்கவைத்துக் கொண்டு அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப தொடர்ந்து தன்னை மேம்படுத்திக் கொள்ளும் அதன் திறனையும் காட்டுகிறது.

பல ஆண்டுகளாக, LOLC ஒரு பாரம்பரிய நிதிச் சேவை வழங்குநர் என்ற நிலையைத் தாண்டிப் பரிணமித்துள்ளது. இது நாடு முழுவதும் உள்ள தனிநபர்கள், தொழில்முனைவோர் மற்றும் சமூகங்களின் முன்னேற்றத்திற்கான ஒரு நம்பகமான பங்குதாரராக உருவெடுத்துள்ளது. நிதிக்கான அணுகலை விரிவுபடுத்துவதன் மூலமும், டிஜிற்றல் புத்தாக்கத்திற்கு முன்னோடியாக இருப்பதன் மூலமும், நாடு தழுவிய அளவில் வலுவான இருப்பைப் பேணுவதன் மூலமும், LOLC தான் சேவை செய்யும் மக்களின் அபிலாஷைகளுடன் நெருக்கமாக இணைந்தே இருந்து வருகிறது. இந்தப் பண்பு, பத்தாண்டு கால இந்த அங்கீகாரத்தில் தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

இந்த மைல்கல் குறித்து கருத்து தெரிவித்த LOLC ஹோல்டிங்ஸ் பி.எல்.சி குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஜெயவர்தன, "தொடர்ந்து பத்து ஆண்டுகளாக ஆண்டின் சிறந்த மக்கள் நிதிச் சேவை வர்த்தகநாமம்" என்ற பட்டத்தைப் பெறுவது ஒரு மகத்தான கௌரவமாகும். ஏனெனில், இந்த அங்கீகாரம் நாங்கள் சேவை செய்யும் மக்களிடமிருந்தே நேரடியாகக் கிடைக்கிறது. ஒரு தசாப்த காலமாக, இலங்கையர்கள் LOLCயை தங்கள் நிதிப் பங்காளராக நம்பி வருகின்றனர். அந்த நம்பிக்கையே நாங்கள் செய்யும் அனைத்திற்கும் அடித்தளமாக விளங்குகிறது என்றார்

# செலிங்கோ லைஃப் 20 ஆவது ஆண்டாக இலங்கையின் மிகவும் பிரபலமான ஆயுள் காப்புறுதி நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது




செலிங்கோ லைஃப் நிறுவனம், SLIM Kantar மக்கள் விருதுகள் நிகழ்வில் தொடர்ந்து 20 ஆவது ஆண்டாக "ஆண்டின் சிறந்த மக்களின் ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநர் என்ற விருதைப் பெற்று, இலங்கையின் மிகவும் பிரபலமான ஆயுள் காப்புறுதி நிறுவனமாக இரண்டு தசாப்தங்களை நிறைவு செய்துள்ளது என்ற குறிப்பிடத்தக்க சாதனையை எட்டியுள்ளது.

இந்த அங்கீகாரம், இந்த விருதுகள் தொடங்கப்பட்டதிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இந்த நுகர்வோர் அடிப்படையிலான முக்கிய விருதை தொடர்ந்து வென்ற ஒரே ஆயுள் காப்புறுதி நிறுவனமாக செலிங்கோ லைஃப் திகழ்வதை உறுதிப்படுத்துகிறது. மேலும், இது இலங்கை மக்களுடன் நிறுவனத்தின் நிலைத்த நம்பிக்கை மற்றும் உறவை பிரதிபலிக்கிறது.

செலிங்கோ லைஃப் நிறுவனமானது 20 ஆண்டுகள் தொடர்ந்து பொதுமக்களின் ஆதரவைப் பெற்ற சாதனையானது, அதன் வலுவான நிதி செயல்திறன் கொண்ட இன்னொரு ஆண்டைத் தொடர வழிவகுக்கிறது. இதன் மூலம், இலங்கையின் ஆயுள் காப்புறுதி சந்தையில் தொடர்ந்து 22 ஆவது ஆண்டாக தனது முன்னணி நிலையை நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த முக்கியமான சாதனை தொடர் பாக செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் நிறைவேற்றுத் தலைவர், ஆர். ரெங்கநாதன் தெரிவிக்கையில் "20 ஆண்டுகள் தொடர்ந்து இலங்கையின் மிகவும் பிரபலமான ஆயுள் காப்பீட்டு நிறுவனமாக தெரிவு செய்யப்படுவது மிக உயர்ந்த கௌரவமாகும். இதை நாம் பணிவுடனும் நன்றியுடனும் ஏற்றுக்கொள்கிறோம். இந்த சாதனை, எமது காப்புறுதிதாரர்கள் எம்மிடம் வைத்துள்ள நிலையான நம்பிக்கைக்கு ஒரு சான்றாகும் அவர்க ளின் நம்பிக்கையே எமது அனைத்து செயற்பாடுகளுக்கும் ஊக்கமாக உள்ளது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதை...

குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து வவுனியா நகரப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது குறித்த 5 இளைஞர்களும் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து1500ற்கும் அதிகமான போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டது. (ம-7,250)

## தையிட்டி திஸ்ஸ...

முன்னெடுக்கப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் குறித்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை அங்கிருந்து அகற்றுமாறு கோரியும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தையிட்டியில் அமைந்துள்ள விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தொடர்ச்சியாகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## யாழ்.இந்து...

கல்லூரியைச் சேர்ந்த 67 மாணவர்கள் 3ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

யாழ்.இந்துக் கல்லூரியில் உயிரியல் பிரிவில் 21 மாணவர்களும் கணிதப் பிரிவில் 43 மாணவர்களும் கலைப் பிரிவில் இரண்டு மாணவர்களும் வர்த்தகப் பிரிவில் ஒரு மாணவரும் 3ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 41 மாணவிகள் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் உயிரியல் பிரிவில் 24 மாணவிகளும் கணிதப் பிரிவில் 9 மாணவிகளும் வர்த்தகப் பிரிவில் ஏழு மாணவிகளும் கலைப் பிரிவில் ஒரு மாணவியும் 3ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 20 மாணவர்கள் 3ஏ சித்திகளையும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 19 மாணவர்கள் 3ஏ சித்திகளையும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 11 பேர் 3ஏ சித்திகளையும் பெற்றுள்ளனர். (ம-7,33)

## கிளிநொச்சி மகா...

தெ.திருக்குமரன் சாதனை படைத்துள்ளார்.

கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் தெ.திருக்குமரனை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேரில் சந்தித்துத் தமது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கு நேற்றுப் புதன்கிழமை (01) நேரடியாகப் பயணம் செய்த ஆளுநர் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சு.முரளிதரன் ஆகியோரைப் பாடசாலை அதிபர் ஐ.நிமல்ராஜ் வரவேற்றார்.

இப்பாடசாலையைச் சேர்ந்த மாணவன் தெ.திருக்குமரன் கணிதப் பிரிவில் தேசிய நிலையில் சாதனை படைத்துள்ள அதேவேளை உயிரியல் பிரிவில் ஆ.கிரிஷேந்த் மற்றும் வர்த்தகப் பிரிவில் க.மதுமினி ஆகியோர் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளனர்.

இந்தச் சாதனை மாணவர்களை ஆளுநர் பாராட்டியதுடன், இவர்களின் வெற்றிக்குக் காரணமாக அமைந்த பெற்றோர், கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர் களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

தமது கடின உழைப்பாலும் சுய முயற்சியாலும் மாபெரும் வெற்றியீட்டிய மாணவர்களைப் பாராட்டிப் பேசிய ஆளுநர், "கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மாணவரொருவர் தேசிய நிலையில் முதலிடம் பெற்றுள்ளமை, மாகாணத்தின் கல்வி வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது" எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டார். (ம-7)

## 62.64 சதவீத...

சதவீதமானோர் பல்கலைக்கழகச் சேர்க்கைக்குத் தகுதி பெற்றுள்ளனர் என இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சை தேர்வில் மொத்தம் 221,413 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 60,397 தனியார் பரீட்சார்த்திகளும் பங்கேற்றனர்.

146,405 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் பல்கலைக்கழகச் சேர்க்கைக்குத் தகுதி பெற்றுள்ளனர் என்றும் அதே நேரத்தில் 30,122 தனியார் பரீட்சார்த்திகளும் பல்கலைக்கழகங்களில் சேர்க்கைக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

அதன்படி மொத்தப் பரீட்சார்த்திகளில் 62.64 சதவீதமான அதாவது 176,527 பரீட்சார்த்திகளில் பல்கலைக்கழக சேர்க்கைக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இத்தகிடையில் பரீட்சையை எதிர்கொண்ட 111 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் பல்வேறு காரணங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## அரி...

சர் மற்றும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த இந்த அவசரக் கூட்டு யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

விவசாயத் திணைக்களம், ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை நிறுவனம் ஆகிய அமைப்புகளின் அண்மையத் தரவுகளின் படி, 2025/26 பெரும் போகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சம்பா மற்றும் கீரிச் சம்பா அரிசியின் அளவு, நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை என நுகர்வோர் விவகார அதிகார சபை சுட்டிக் காட்டியுள்ளது. (ம-7)

## இயக்...

ளது.

குறித்த போராட்டத்தில் அனைவரையும் அணிதிரளுமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் அழைப்பு விடுத்துள்ளார்.

இயக்கச்சிப் பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான 25ஏக்கர் காணியை இராணுவ முகாமினை அமைக்கும் நோக்குடன் நிரந்தரமாக சுவீகரிக்கும் முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், காணி சுவீகரிப்பின் முதற்கட்டமாகக் காணியினை அளவீடு செய்யும் பணிகள் நிலஅளவை திணைக்களத்தால் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில் தனியார் காணிகளை இராணுவத் தேவைக்கு சுவீகரிப்பதற்கு எதிராக இன்று இயக்கச்சிப் பகுதியில் பாரிய போராட்டம் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த போராட்டத்திற்கு வேறுபாடுகள் இன்றி அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

### மஹஜன சம்பத
திகதி 2026.04.01 — சீட்டிழுப்பு இலக்கம் 6151
S 5 5 6 0 2 3

அத சம்பத — S 6 0 2 3 — சீட்டிழுப்பு இலக்கம் 0726

### சுப தவசக்
திகதி 2026.04.01 — சீட்டிழுப்பு இலக்கம் 0287
கன்னி 13 26 37 — 8817

### தன நிதானய
திகதி - 2026.04.01 — சீட்டிழுப்பு இலக்கம் - 2181
B 15 33 38 57 B

### மெகா பவர்
திகதி 01/04/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2499
N 15 26 36 50 71

### ஜய
திகதி 2026.04.01 — சீட்டிழுப்பு இலக்கம் 0419
L 5 4 0 4

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4393 — சீட்டிழுப்பு திகதி 01.04.2026
X 25 32 34 74

### ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2026.04.01 — சீட்டிழுப்பு இலக்கம் 1460
இடபம் 11 27 50 60 இடபம்

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா சம்பத
01.04.2026 — வெற்றி வாரம் 0859
L 2 1 2 0 4 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,296,325.60

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3125 — சீட்டிழுப்பு திகதி 2026.04.01 — தினம் புதன்கிழமை
32 46 49 56 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.113,000,005.60

### சனிதா
திகதி 01.04.2026 — வெற்றி வாரம் 5286
06 08 35 39 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,121,644.40

### சசிரி
வெற்றி வாரம் 955 — சீட்டிழுப்பு திகதி 01.04.2026 — புதன்கிழமை
05 13 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,735,520.00

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4837 — சீட்டிழுப்பு திகதி 01.04.2026 — தினம் புதன்கிழமை
05 23 50 52 — விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,593,850.80

### கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 34 23 24 52 55
சீட்டிழுப்பு வாரம் 2301 — திகதி 01.04.2026 — புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.218,921,948.00

### அட கோடிபதி
புதன்கிழமை — வெற்றி வாரம் : 2951 — சீட்டிழுப்பு திகதி : 2026.04.01
06 13 34 49 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,861,170.40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**TECHNA** Technical Institute

தொழினுட்பப்பிரிவு **077 170 3549**

விரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

### A/L 2025 உயர்தரப் பரீட்சையில் மாவட்ட நிலையில்

**உயிர் முறைமைகள் தொழினுட்பவியல், பொறியியல் தொழினுட்பவியல் இரு பிரிவுகளிலும் எமது மாணவர்களே முதலிடம்!**

#### உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|---|
| தே. கிஷானி | 2A B | 01 | தி. யானுஷா (கிளி) | B 2C | 02 |
| பி. கிபிசாலினி | 2A B | 02 | க. ருபிஷானி | 3C | 32 |
| சி. தர்சிகா | 2A B | 04 | சி. கோகிசன் | 3C | 33 |
| ஜெ. தனுறா | A B C | 05 | றோ. ஜிதுஷா | 2C S | 34 |
| நி. புவிதா | A B C | 06 | கி. சந்தியா | C 2S | 58 |
| அ. பேரெழிலன் | 2B C | 08 | அ. ஹர்சிகா | C 2S | 63 |
| த. லக்சன் | A B C | 10 | ச. நிலாந்தன் (கிளி) | 2C S | 05 |
| த. ஷார்மினி | B 2C | 17 | செயன்முறை, கருத்தரங்களில் பங்குபற்றியோர் | | |
| தி. ஜஸ்மிகா | 2B C | 18 | ப.ஸ்ரேயா (கிளி) | 2B C | 01 |
| ந. பானுசன் | 2C S | 29 | து. சுழகாசினி (கிளி) | 3C | 09 |
| கோ. பவனா | 3C | 30 | சி. மதுசாயினி | B C S | 38 |
| | | | கோ. அபிஷா | 2C S | 48 |

(7179)

#### பொறியியல் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|---|
| செ. வினுசிகன் | 2A B | 01 | ஜ.ஜனிதரன் | 2B C | 27 |
| சி. விதுசன் (முல்லை) | A 2B | 01 | பி. ஜெயபிரவின் | B 2C | 30 |
| அ. அன்புசெல்வன் | 2A B | 03 | சூ. சுலக்சி | B 2C | 32 |
| ஜோ. இவாங்கிரன் (கிளி) | 2B C | 03 | ற.தமிழரசன் | 3C | 36 |
| மு. முகாத்(மன்னார்) | 2C S | 03 | கு. பிரியந்தி | 3C | 39 |
| பி. சர்மிலன் (கிளி) | C 2S | 04 | ரா. ஷாகித் | 2C S | 49 |
| சி. தஜிசன் | A 2B | 05 | ற. ஜானுயா | B C S | 50 |
| அ. சஜீந்த் | A 2B | 06 | ச. சங்கீதா | 3C | 51 |
| வி. தனுஜா | A B C | 07 | ச. தருஷ் | 2C S | 53 |
| சி. சந்தோஸ் | A 2B | 09 | வி. சரணியா | 3C | 54 |
| ச. பகிஸ்கர் | 2B C | 12 | ரா. சன்சிதா | C 2S | 70 |
| சி. தமிழழகன் | A B C | 13 | செயன்முறை, கருத்தரங்களில் பங்குபற்றியோர் | | |
| சு. வைஸ்ணவி | B 2C | 26 | சி. பௌசிகன் 2C S, 57 யோ. இந்துசன் 3C, 62 | | |

ஆரம்பம் **A/L 2025 REPEAT BATCH – 04/04/2026, 8.00AM**



மாணவர் விசா / இலவச ஆலோசனை

**STUDY IN UK**

**IELTS** Academic General UKVI

Mrs S.Mayuri (BA Eng.Lit) அவர்களின்

**Life Skills A1/A2**

திருமணமாகி UK செல்பவர்களுக்கானது

நேரில் வரும்போது எல்லாவிதமான வெளிநாடுகளுக்கு செல்பவர்களை பார்வையிட முடியும்.

**WEC COLLEGE**

பருத்தித்துறை வீதி ஆரியகுளம், யாழ்ப்பாணம்

(ARIYA HOSPITAL Building) (2196)

**0779265447/ 0217200989**


## அரச மருத்துவ அதிகாரிகள் இன்று பணிப் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

நியாயமற்ற இடமாற்றங்களைக் கண்டித்து இன்று (2) வியாழக்கிழமை அரச மருத்துவர்கள் நாடளாவிய ரீதியில் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து நேற்றுப் புதன்கிழமை (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உபசெயலாளர் வைத்தியர் ஹன்ச மால் வீரசூரிய, சுகாதார அமைச்சராக நளிந்த ஜயதிஸ்ஸ அங்கம் வகிக்கும் தற்போதைய அரசாங்கம், வைத்தியர்களை அவர்களது விருப்பத்துக்கு மாறாக பணியாற்றுவதற்குக் கட்டாயப்படுத்த முயற்சிப்பதாக குற்றம் சாட்டினார்.

(ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5320) **076 825 7716** (ஆகாஸ்)



**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றில் வேலைவாய்ப்பு

- Cleaning staff (துப்பரவு பணியாளர்)
- Cooking staff (சமையலாளர்)
  - பெண்கள் விரும்பத்தக்கது
  - வயது எல்லை - 30 வயதிற்கு மேற்பட்டோர்
  - வேலை நேரம் 08.30 a.m - 02.00 pm

Location :- Jaffna

(C-5321)

**076 771 2172 / 077 998 1914**



**வேலையாள் தேவை**

சிலாபம், யாழ்ப்பாணம், சுன்னாகம் போன்ற பிரதேசத்திற்கு மேசன், கூலி வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு :

**076 136 6437, 076 136 6436**

(7176)



**வீடு வாடகைக்கு விடப்படும்**

இல. 92, சுதுமலை ஒழுங்கை, சுதுமலை மானிப்பாயில் உள்ள பெரிய/ சிறிய வீடு வாடகைக்கு விடப்படும்.

(7175)

**077 657 1107**
**0033652103065**



**வைத்தியம்**

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால்,
குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம் | வயிற்றுப்புண் |
Gastritis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான
மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால்
ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்


நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

தொடர்புகளுக்கு : **0777 301 669**

(7178)


# மரண அறிவித்தல்



தோற்றம் 18.05.1948

மறைவு 30.03.2026

## திரு.சின்னத்தம்பி குலசிங்கம்

### (ஓய்வு பெற்ற மேலதிக காணி மாவட்டப் பதிவாளர் – பருத்தித்துறை, ஆங்கில மொழிபெயர்ப்பாளர்)

யாழ்.வடமராட்சி புலவரோடை வதிரியைப் பிறப்பிடமாகவும் கோவில் தோட்டம் அல்வாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திரு.சின்னத்தம்பி குலசிங்கம் அவர்கள் கடந்த (30.03.2026) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சகுந்தலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் குலவதி, குலக்கண்ணன், குலதாசன் (ஓய்வு பெற்ற ஊழியர்- மாவட்ட செயலகம், கிளிநொச்சி), இராஜலட்சுமி ( குலராணி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தேவராஜா (ஓய்வு பெற்ற வரி உத்தியோகத்தர்), பாலகிருஷ்ணன் (ஓய்வு பெற்ற நில அளவையாளர்), பத்மராணி, காலஞ்சென்ற புஷ்பமலர் (முகாமைத்துவ உதவியாளர் - கமநல சேவைத் திணைக்களம், கிளிநொச்சி), காலஞ்சென்ற சச்சிதானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரியதர்சினி (கனடா), சங்கீதா - ஆசிரியர் ( யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவானந்தரூபன் ( கனடா), காண்டீபன் - முகாமையாளர் - Vallibel Finance PLC, நெல்லியடி ஆகியோரின் அன்பு மாமனாரும் முரளீதரன் (அவுஸ்ரேலியா), செந்தூரன் (துபாய்), தர்சன் (அவுஸ்ரேலியா), அபிராமி (நியூசிலன்ட்), திருபரன் (அவுஸ்ரேலியா), வித்யா, சுதாகர் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாய் மாமனாரும் பிருந்திகா, மயூரதன், ராஜிகா, தனுசன்(ஜேர்மன்), சோபிகா (ஜேர்மன்), கிருத்திகா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் லஷ்மிகா, லக்ஷிகன், லக்ஷிதா, கிரிஷிகா, கிருஷ்ணிதா, கிருஷன்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2026) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் கோவில் தோட்டம், அல்வாய் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கோவில் தோட்டம்,
அல்வாய் வடக்கு.

தகவல் :
குடும்பத்தினர்

(2201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 91, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.